THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜூனன்

ஏப்ரல்
2006
மரம் 6
கனி 5

# கிறிஸ்துவின் வசனம் மாத இதழின் இருபத்திரெண்டாவது வாசகர் கருத்தரங்கு

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தநாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கத்திற்கு சிவகங்கை மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கிறோம். அனுமதி இலவசம்.

**நோக்கம் :** ★ 1992முதல்2005 வரை வெளிவந்த இதழைக் குறித்த ஓர் ஆய்வு

★இருபத்திரெண்டாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை

★ எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு

**நாள் : ஏப்ரல் 29 - ம் தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி**

**இடம் : கிறிஸ்துவகூடுகை சரவணாநகர். குன்றக்குடி (P.O),**

**காரைக்குடி தாலுகா, சிவகங்கை, மாவட்டம், தமிழ்நாடு.**

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*

**L.டேவிட்**


***Cell: 9865688044***

*வாருங்கள்!* *பங்குபெறுங்கள்!!* *அறிந்து கொள்ளுங்கள்!!!*

# கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி




**உங்கள் WIN TV -யில்**
**ஒவ்வொரு வாரமும் திங்கள்,**
**செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி**
**காலை 6.15 முதல் 6.30 மணி வரை**
**பாருங்கள். மற்றும்**







**உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய சேவை 49 மீட்டரில், ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள்.**




**THE WORD OF CHRIST**
**P.O.BOX.5**
**BATLAGUNDU -624 202 S.INDIA**
**Phone: 04543 263278 Cell: 9443558041**

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

**"The Churches Of Christ salute you" Romans 16:16**


**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 6 ஏப்ரல் - 2006 கனி -5


ஆசிரியருரை

# கிறிஸ்துவுக்குள் வெற்றி
## Triumph in Christ



ஒருவனுக்கு வெற்றி பல வழிகளில் வருகிறது. அவையெல்லாம் உண்மையான வெற்றி ஆகாது. ஒருவன் கிறிஸ்துவுக்குள் பெறுகிற வெற்றியே மிகசிறப்பானதும் ஆசீர்வாதமானதுமாகும். இவ்வெற்றி அந்த மனிதனை நித்தியராஜ்யத்திற்கு அழைத்துச் செல்கிறது. மாம்ச சம்பந்தமான வெற்றியோ புல்லின் பூவைப்போல ஒரு நாள் அழிந்து போகக்கூடிய ஒன்றாக இருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (2கொரி. 2:14) என்று எழுதுகிறார். இந்த பவுல் புதிய ஏற்பாட்டில் 14 நிருபங்களை எழுதியிருக்கிறார். "எருசலேம் துவக்கிச் சுற்றிலும் இல்லிரிக்கம் தேசம் வரைக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்" (ரோ.15:19) என்கிறார். இவரை கர்த்தர் பிரித்தெடுத்து தம்முடைய ராஜ்யமாகிய சபையில் பயன்படுத்தினார். இவர் கிறிஸ்துவுக்குள் வரும்முன்னே சபையை துன்பப்படுத்துகிறவராயும் அந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி சிறைச்சாலைகளில் ஒப்புவித்து மரணபரியந்தம் துன்பப்படுத்துகிறவராயும் இருந்தார். அப்போது கிடைக்காத வெற்றியுள்ள வாழ்க்கை இவருக்கு கிறிஸ்துவுக்குள் வந்த பின்பு கிடைத்தது. ஆகையால் தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தார். இந்த பவுலைக் கொண்டு தேவன் எல்லா இடங்களிலும் கிறிஸ்துவுக்குள் வெற்றி சிறக்கப் பண்ணினார்.

ஒரு முறை குறி சொல்லும் ஆவியைக் கொண்டிருந்த ஒரு ஸ்திரீ பவுலைத் தொடர்ந்து வந்து இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர் இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். இப்படி அநேக நாள் செய்து கொண்டு வருவதை கண்ட பவுல் சினங்கொண்டு நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த

ஆவியுடனே சொல்ல அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று இதனால் அவளுடைய ஏஜமான்கள் தங்கள் ஆதாயம் அற்றுப் போயிற்று என்று கண்டு பவுலையும் சீலாவையும் பிடித்து அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து இந்த யூத மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம் பண்ணி ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும் அனுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்று சொல்லி அவர்களை அடிக்கவும் வஸ்திரங்களை கிழித்துப்போடவும் சொல்லி அநேக அடி அடித்த பின்பு சிறைச்சாலையில் அவர்கள் கால்களைத் தொழு மரத்தில் மாட்டிவைத்தார்கள். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப்பாடினார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திரபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று கர்த்தர் இப்படியாக அவர்களை விடுதலை செய்தார். பொழுது விடிந்த பின்பு அந்த மனுஷரை விட்டு விடுங்கள் என்று சொல்ல அதிகாரிகள் சேவகர்களை அனுப்பினார்கள் சிறைச்சாலைக்காரன் பவுலுக்கு இந்த வார்த்தைகளை அறிவித்து உங்களை விடுதலையாக்கும்படிக்கு அதிகாரிகள் கட்டளை அனுப்பினார்கள். ஆகையால் நீங்கள் இப்பொழுது புறப்பட்டுச் சமாதானத்துடனே போங்கள் என்றான் அதற்குப் பவுல் ரோமராகிய எங்களை அவர்கள் நியாயம் விசாரியாமல் வெளியரங்கமாய் அடித்து, சிறைச்சாலையிலேபோட்டார்கள்; இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலையாக்குகிறார்களோ? அப்படியல்ல, அவர்களே வந்து, எங்களை வெளியே அழைத்து அனுப்பிவிடட்டும் என்றனர். சேவகர் இந்த வார்த்தைகளை அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள் ரோமராயிருக்கிறார்களென்று அவர்கள் கேட்டபொழுது பயந்துவந்த அவர்களுடனே தயவாய்ப்பேசி அவர்களை வெளியே அழைத்துக்கொண்டு போய் பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப்போகும்படி கேட்டுக்கொண்டார்கள். இப்படியாக கர்த்தர் பவுலைக் கொண்டு பெரிய காரியங்களை செய்தார்.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் நம்மோடு இருக்கிறார் என்ற தைரியத்தோடு நாமும் இந்த பவுலைப்போல செயல்படுவோமானால் நம்மையும்கிறிஸ்துவுக்குள் வெற்றி சிறக்கப்பண்ணுவார். கிறிஸ்துவுக்குள் என்று சொல்லும்போது "ஒருவன் கிறிஸ்துவுக்குள் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின" (2கொ.5:6). கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது ஒருவன் புது சிருஷ்டியாயிருக்கிறான். அவனுடைய பழைய சுபாவங்கள் ஒழிந்துபோகிறது எல்லாம் புதிதாகிறது பழைய வாழ்க்கை மாற்றப்படுகிறது. கிறிஸ்துவின் சபையை துன்பப்படுத்திக்கொண்டுவந்த சவுல், அனனியா மூலமாக ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவுக்குள் புதிய மனுஷனாக, பவுலாக அதாவது புதிய சிருஷ்டியாக மாற்றப்பட்டார். அன்பானவர்களே, நீங்கள் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாயிருக்கிறீர்களா? பழைய மனிதனாக நீங்கள் இருந்துகொண்டு வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடியாது. கர்த்தர் பவுலை கிறிஸ்துவுக்குள் வெற்றி சிறக்கப்பண்ணினார் உங்களையும் வெற்றி சிறக்கப்பண்ணுவார் நீங்கள் முதலாவது ஞானஸ்நானத்தின் மூலமாக கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக மாற முற்படுங்கள்.

லீஸ்திராவிலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாயிருந்து ஒருபோதும் நடவாமல் கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து பவுல் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான் அவனைப் பவுல் உற்றுப்பார்த்து இரட்சிப்புக்கேற்ற

விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான். இதைக்கண்ட ஜனங்கள் தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள் என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச்சொல்லி பர்னபாவை யூப்பித்தர் என்றும் பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால் அவனை மெர்க்குரி என்றும் சொன்னார்கள். இப்படியாக கர்த்தர் அவர்களை வெற்றிசிறக்கப்பண்ணினார். மேலும் அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து ஜனங்களுக்குப் போதனைசெய்து பவுலைக் கல்லெறிந்து அவன் மரித்துப்போனானென்று எண்ணி அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள். சீஷர்கள் அவனைச் சூழ்ந்து நிற்கையில் அவன் எழுந்து பட்டணத்திற்குள் பிரவேசித்து மறுநாளில் பர்னபாவுடனே கூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப்போனான். நான் அனுதினமும் சாகிறேன் என்று பவுல்சொன்னார் என்றால் வெறும் வார்த்தைகளோடு நின்று விடவில்லை தன்னுடைய வாழ்க்கையில் வந்த துன்பங்களை அந்த விதமாக அனுபவித்திருக்கிறார்.

நம்முடைய வாழ்க்கையிலே நாம் வெற்றி சிறக்க வேண்டுமானால் நமக்கு வரக்கூடிய பாடுகளை நாம் அனுபவித்தே ஆக வேண்டும். "நாம் அவரோடே கூட மரித்தோமானால் அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம். அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்" (2தீமோ. 2:11,12). பந்தயத்திலே போராடுகிற எல்லாரும் பந்தயப் பொருளைப் பெற்று வெற்றியடைகிறார்களா? இல்லையே! கடுமையான பயிற்சி எடுத்து பந்தயத்திலே வெற்றியடைகிறார்கள். அதைப்போல கிறிஸ்துவுக்குள் வந்த நமக்கு பலவழிகளில் பாடுகள் வரக்கூடியதாயிருக்கிறது. இவைகளைப் பொறுமையுடன் சகித்து அந்தப் பாடுகளை ஏற்று பரம கானானை நோக்கி வெற்றி நடைபோட வேண்டும். ஆதி அப்போஸ்தலர்களும் சீஷர்களும் தங்களுக்கு நியமிக்கப்பட்ட பாடுகளை அதாவது உபத்திரவத்தை கண்டு பயப்படவில்லை. அதை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டனர். "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால் சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டுப்புறப்பட்டுப்போய் தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" (அப்.5:41,42).

இஸ்ரவேலவர்கள் எரிகோ பட்டணத்தை ஒவ்வொருநாளும் ஒருமுறை சுற்றி வந்து, பின்பு ஏழாம்நாளில் ஏழுதரம் சுற்றிவந்து, எக்காளங்களை ஊதி ஆர்ப்பரித்து எரிகோவை வெற்றி கொண்டார்கள். நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த அவர்கள் இப்படிப்பட்ட வெற்றிகளை கர்த்தருடைய நாமத்தினாலே குவித்திருக்கும்போது அதிலும் சிறந்த கிறிஸ்துவின் ஊழியம் அதைப்பார்க்கிலும் மேன்மையுள்ளதல்லவா? "இப்படியாக, மகிமைப்பட்டிருந்த அந்த ஊழியம் இந்த ஊழியத்திற்கு உண்டாயிருக்கிற சிறந்த மகிமைக்கு முன்பாக மகிமைப்பட்டதல்ல அன்றியும் ஒழிந்து போவதே மகிமையுள்ளதாயிருந்ததானால், நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே நாங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையை உடையவர்களாதலால் மிகவும் தாராளமாய்ப் பேசுகிறோம்." (2கொ.3:10,11) ஆக புது உடன்படிக்கையின் கீழ் அதாவது கிறிஸ்துவுக்குள் வருகிற மெய்யான வெற்றி நித்திய ஜீவனைக்கொடுக்கிறது இவ்வெற்றியை நீங்கள் பெற

வேண்டுமானால் உங்களை முதலாவது கர்த்தருக்கு அர்ப்பணித்து கர்த்தருக்குள் வர பிரயாசப்படுங்கள் "தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே" (2கொ.1:20) கர்த்தர் வெற்றியுள்ள வாழ்க்கையை உங்களுக்கு கட்டளையிடுவாராக.

## ஊழியம் என்பது என்ன?

### *ஊழியம் அல்ல....*

* நீ சரியானவனென்றும் உன் நண்பன் சரியில்லாவனென்றும் நிரூபிக்க முயற்சித்து ஒரு நண்பனோடு கர்வமாக விவாதிப்பது.
* மற்றவர்களுக்கு இயேசு கிறிஸ்துவை அறிவிக்க அலட்சியம் செய்கையில் உல்லாசத்திற்காக உணவுக்காக ஐக்கியத்திற்காக ஒரு இடத்தை கட்டுவது.
* பிரிவினை உலகத்தைப் பிரியப்படுத்தும் பொருட்டும் மனந்திருந்தாத ஜனங்களால் நம்முடைய அங்கத்தினர்களை அதிகப்படுத்தும் பொருட்டும் சத்தியத்தை விட்டக்கொடுத்தல்.
* பாவத்தில் இழந்துபோன உலகத்தின் தேவைகளை புறக்கணிக்கையில் நம்முடைய சொந்த வசதிக்காக மற்றும் இன்பத்திற்காக கொடுத்தல்.
* கோடிக்கணக்காக ஜனங்கள் சுவிசேஷத்தைக் கேள்வி படாதிருக்கையில் மழைகாலத்திற்காகப் பணத்தைப் பதுக்கி வைத்தல்.

### *ஊழியம் என்பது....*

* ஒரு இரட்சிக்கப்பட்டுள்ள பாவி அன்போடும் சாந்தத்தோடும் இழந்துபோன பாவிக்கு, இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென உபதேசித்தல்.
* ஆவிக்குரிய போஜனத்தைக் கண்டுகொண்டிருக்கிற ஒருவன் ஆவிக்குரிய பசியினால் வாடுபவர்க்கு அந்த உணவைப் பகிர்ந்து கொடுத்தல்.
* தேவனுடைய விசுவாசமிக்க ஒரு குழந்தை தேவனுடைய விழுந்துபோன ஒரு குழந்தையை அன்போடு திரும்பவும் தொழுவத்திற்குள் அழைத்து வருதல்.
* நம்முடைய தலைவருக்கென திரளான அறுவடையை நாம் கொண்டு வர முடியுமென விளைச்சற்ற நிலங்கள் மேல் நம்முடைய கண்களை ஏறெடுத்து ஒவ்வொன்றும் செய்தல்.
* பசியுள்ளோரை போஷித்து, நிர்வாணிகளை உடுத்துவித்து, வியாதியஸ்தரையும், சிறையிலிருப்போரையும் சந்தித்து, மறுகன்னத்தைத் திருப்பிகொடுத்து, சத்துருக்களுக்காக ஜெபித்து, நமக்குவிரோதமாய் யுத்தம் பண்ணுகிறவர்களை ஆசீர்வதித்து, நம்மையும் மற்றவர்களையும் இரட்சிக்கும் பொருட்டு விலகிச்செல்லாதிருத்தல்.

### *நீ ஒரு ஊழிக்ககாரனா?*

- The Voice of Truth....

# நாம் ஏன் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்கிறோம்.
## *Why We Call on The Name of the Lord*

*J.C.Choate*



கர்த்தருடைய நாமத்தில் தொழுதுகொள்வது பற்றி வேதவாக்கியங்கள் அதிகமான நேரங்களில் பேசுகிறது. அவைகளில் சிலவற்றை கவனிப்போம். நீண்டகாலத்திற்கு முன், "அதற்குப்பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கத்தரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும் உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும்; அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். வானத்திலும் பூமியிலும் இரத்தம் அக்கினி புகைஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும் அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான். கர்த்தர் சொன்னபடி சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும் கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும்" (யோவான்.2:28-32) என யோவேல், தீர்க்கதரிசனம் உரைத்தார்.

அப்போஸ்தலர் மேல் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட பிறகு அவர்கள் வெவ்வேறு பாஷைகளில் அல்லது மொழிகளில் பேசத் தொடங்கினார்கள் அங்கே கூடியிருந்தவர்கள் பிரமித்து எவ்வாறு இவர்கள் இப்படி பேசமுடிகிறது என்று சொல்லி பல்வேறு தீர்மானங்களுக்குள்ளானார்கள். மற்றவர்களோ இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம் பண்ணினார்கள். பிறகு, "பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று. அவர்களை நோக்கி உரத்த சத்தமாய்; யூதர்களே எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே நீங்களெல்லாரும் அறிந்துகொள்வீர்களாக என் வார்த்தைகளுக்குச் செவி கொடுங்கள் நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்க தரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள் என்னுடைய ஊழியக்காரர்மேலும் என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன் அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள். அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும் தாழப் பூமியிலே இரத்தம் அக்கினி புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும் சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்" (அப்.2:14-21) என வாசிக்கிறோம்.

நீண்ட நாட்களுக்கு முன் யோவேல் அறிவித்த தீர்க்கத்தரிசனத்திலும் எருசலேம் நகரத்தில் பெந்தெகொஸ்தே நாளில் அதனுடைய நிறைவேறுதலிலும் இது கிறிஸ்துவினுடைய மரணத்தோடும் பரிசுத்த ஆவி ஊற்றப்படுதலோடும இரட்சிப்பு வருதலோடும் இது செய்யப்பட வேண்டியிருந்தது என்பது தெளிவாகிறது. இவைகளெல்லாம் கிறிஸ்துவின் மரணத்தைத் தொடர்ந்த அந்தக் கடைசி நாட்களில் நடைபெற்றது. எபிரெய எழுத்தர் கடைசிநாட்களில் தேவன் தம்முடைய குமாரன் மூலம் திருவுளம் பற்றினார் (எபி.2:1,2) என்று கூறினார். மேலும் இந்நாட்களில் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தியிருக்கும்படி தம்முடைய வார்த்தையின் மூலம் அவர் நம்மோடு பேசிக்கொண்டிருக்கிறார். இது குறித்து பவுல் பேசுகையில் "நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை மனுஷனால் கற்றதுமில்லை இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்" (கலா.1:12) என பிரசங்கித்தார். இது குறித்தும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைக் குறித்தும் கண்டிருந்தது பற்றியும் இந்தத் தீர்க்கத்தரிசன வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்; காலம் சமீபமாயிருக்கிறது" (வெளி 1:3) என்கிறார்.

இவ்வாறாக அப்போஸ்தலர் 2ல் அப்போஸ்தலர் மேல் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டபிறகு அவர்கள் கிறிஸ்துவின் வருகை, தாம் தேவனிடத்திலிருந்து வந்தவர் என நிரூபிக்கும்படி அவர் செய்த அற்புதங்கள் அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் மேலும் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் ஆளுகை செய்ய பிதாவின் வலது பாரிசத்தில் உட்காரும்படிக்கு எழுந்தருளியது குறித்தும் பிரசங்கித்தார்கள் எனச் சொல்லும் வேதவாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். இந்த காரியங்களைக் குறித்து கேள்விப்பட்டபோது மூவாயிரம் பேர் இருதயத்தில் குத்தப்பட்டு தாங்கள் என்ன செய்ய வேண்டுமென அறிய விரும்பினார்கள். வேதவாக்கியம் "பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தரை வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான். அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். (அப்.2:38-42) எனத் தொடருகிறது.

இப்பொழுது நாம் பல காரியங்களைக் குறித்து இங்கே கவனிப்போம். முதலாவதாக பேதுரு, கர்த்தரால் அழைக்கப்பட்ட ஜனங்கள் என்ற குறிப்பை உருவாக்குகிறார். எவ்வாறு அவர் அதை செய்கிறார். பவுல் தெசலோனிக்கேயா பட்டணத்துக் கிறிஸ்தவர்களை "நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர்

உங்களை அழைத்தார் (2தெச.2:14) என்று சொன்னார். வேறு வார்த்தையில், பவுல் பிரசங்கித்திருந்த சுவிசேஷத்தினாலே அவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அந்த சுவிசேஷம் என்ன? ரோமர் 10:15ல் இது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் மேலும் கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலினால் ஏற்படுத்தப்பட்ட இரட்சிப்பு ஆகும்" (1கொரி. 15:1-4). இன்னுமதிகமாக ஒருவன் இரட்சிக்கப்படும்படிக்கு அவன் சந்திக்கவேண்டிய சுவிசேஷ நிபந்தனைகள் இருந்தன.

அந்த நிபந்தனைகளில் ஒன்று ஒருவன் கிறிஸ்துவை விசுவாசித்தல், மற்றொன்று ஒருவன் தன் பாவங்களுக்காக மனந்திரும்புதல், கடைசியாக ஒருவன் தன்னுடைய பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் எடுத்தல் போன்றவையாகும் அப்போஸ்தலர் 2ல் இவையெல்லாம் பிரசங்கிக்கப்பட்டது அதாவது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலைப்பற்றி அப்போஸ்தலர் பிரசங்கித்தார்கள் மேலும் மூவாயிரம் பேர் விசுவாசிகளான போது அவர்கள் தாங்கள் என்னசெய்யவேண்டுமென்பதை அறிய விரும்பினார்கள் விசுவாசிகளான அவர்கள் அவர்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டுமென போதிக்கப்பட்டார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதின் மூலம் கர்த்தர் அவர்களை தமக்கு கீழ்ப்படியும்படி அழைத்தார். இங்கே குறிப்பிடப்பட்டுள்ளபடி அந்த மூவாயிரம் பேர் கர்த்தருடைய அழைப்புக்குப் பதிலளித்து கீழ்ப்படிந்தார்கள். அதன்பிறகு கர்த்தர் அவர்களை இரட்சித்து அவர்களைத் தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டார்.

இரண்டாவதாக, கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற அனைவரும் மீட்கப்படுவார்கள் அல்லது இரட்சிக்கப்படுவார்கள். அப்போது அந்த நாள் வருமென்று யோவேல் தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது. பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் பெந்தெகொஸ்தே நாள் வந்த போது அந்நாளிலே அந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்றனர்.

அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்குக் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் என்பதின் அர்த்தம் என்ன? அநேகர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் அவருடைய இரட்சிப்பிற்காகக் கேட்பது என்று அர்த்தம் என கூறியிருக்கின்றனர். வேறொரு வார்த்தையில் அவர்கள் ஜெபத்துடன் சம்பந்தப்படுத்தி கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் என்கின்றனர். ஆனால் இரட்சிப்போடு சம்பந்தப்படுத்தி ஜெபம் குறிப்பிடப்பட்டுள்ளதாக எங்கே எழுதப்பட்டுள்ளது? உண்மையாகவே கிறிஸ்து பிரசங்கிக்கப்பட்ட பிற்பாடு அவர்கள் இருதயத்தில் குத்தப்பட்ட பின் அல்லது கிறிஸ்துவில் விசுவாசிகளாக மாறின பின் அவர்கள் தாங்கள் என்ன செய்யவேண்டுமென அறியவிரும்பினார்கள். பேதுரு அவர்கள் மனந்திரும்பி அவர்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டுமென அவர்களுக்குப் போதித்தார். வேதவாக்கியம், மூவாயிரம்பேர் இவ்வாறு செய்தார்கள். கர்த்தர் இரட்சிக்கப்பட்டவர்களை தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டார் எனத் தொடர்ந்து கூறுகிறது. ஆனபடியினால் இந்த விஷயத்தில் நாம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல் என்பது கர்த்தருக்குக் கீழ்ப்படிதல் என பொருள்படுகிறது என்ற முடிவுக்கு வருகிறோம். இதை விளக்குவதற்கு இன்னொரு விதம் அதாவது ஒருவன்

அல்லது அநேகர் அவருக்குக் கீழ்ப்படியும்போது அவர் அவர்களை இரட்சிப்பார். (மாற்.16:15,16) ஆனபடியினால் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதனால் ஒருவன் அவரை நோக்கி தன்னை இரட்சிக்கும்படி அவருடைய வாக்குத்தத்தை நிறைவேற்றும்படி வேண்டிக்கொள்ள தன்னுடைய கீழ்ப்படிதல் மூலமாக கர்த்தரை நோக்கித் தொழுதுகொள்ளுகிறான்.

மூன்றாவதாக, கர்த்தர் மாம்சமான யாவரும் மேலும் தம்முடைய ஆவியை ஊற்றும்போது அந்தநாள் வருமென தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்டது. அவர் அந்த வாக்குதத்தத்தைக் காக்கும்படி நீடித்திருந்தார் என்று நான் மிகைப்படுத்திக் கூறுகிறேன். பெந்தெகொஸ்தே நாளில் அவர் தம்முடைய ஆவியை ஊற்றினார் அல்லது அப்போஸ்தலரை பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானப்படுத்தினார். மேலும் அவர்கள் மூலம் உலகம் முழுவதும் அவர்களுடைய பிரசங்கத்தினால் ஆசீர்வதிக்கப்படும் மேலும் பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின்படி கர்த்தருடைய வார்த்தை வேதபுத்தகத்திலும் எழுதப்பட்டுள்ளது. அவர்களுடைய பிரசங்கத்தின் விளைவினால் கீழ்ப்படிந்த அனைவரும் இரட்சிக்கப்பட்டதுமல்லாமல் அவர்கள் பரிசுத்த ஆவியும் கொடுக்கப்பட்டார்கள். இது அந்த பெந்தெகொஸ்தே நாளில் இருந்தவர்களுக்கு மட்டுமல்ல அவர்களுடைய குமார குமார்த்திகளுக்கும் அல்லது வருங்கால சந்ததியினருக்கும் மேலும் தூரமாயிருந்தவர்களுக்கும் அதாவது புறஜாதியாருக்கும் கொடுக்கப்பட்டது. சிறிது காலத்திற்கும் பின் யூதர்களைப் போல் புறஜாதியாரும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள் என்பதை நிரூபிக்கும்படியாக கொர்நேலியுவும் அவர் வீட்டாரனைவரும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். அப்போஸ்தலர்களும் கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டாரனைவரும் பரிசுத்த ஆவியைப் பெற்றதோடுங்கூட அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளைத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மேல் வைக்க அவர்களும் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டார்கள். மற்ற அனைவரும் பரிசுத்த ஆவியின் சாதரண அளவினைப் பெற்றார்கள் அல்லது பரிசுத்த ஆவியினால் அற்புதம் செய்ய முடியாத அளவினைப் பெற்றார்கள் மேலும் அது நம்முடைய நாட்கள் வரைக்கும் தொடருகிறதாயிருக்கிறது. இவ்வாறாக கர்த்தர் இந்தத்தீர்க்கத்தரிசனங்களை நிறைவேற்றி தம்முடைய வார்த்தையை ஒவ்வொரு சூழ்நிலையிலும் நிலைத்திருக்கச் செய்திருக்கிறார்கள்.

இன்னொரு சமயத்தில் பவுல் ரோமருக்கு இதைப்பற்றி கூறியது என்ன? "இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது. இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே என்னவென்றால் கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. யூதனென்னும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார். ஆதலால் கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி

அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே. ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக்குறித்து ஏசாயா, கர்த்தாவே எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான். ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர்.10:8-17) என எழுதினார்.

கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவன் இரட்சிக்கப்படுவான் என்ற வசனத்தை இந்த எழுத்தர் மீண்டும் ஒப்பிட்டுச் சொல்வதை தயவுசெய்து இந்த வேதவாக்கியத்தை வாசித்து கவனியுங்கள். இங்கே எது சம்பந்தப்பட்டுள்ளது? இந்த பகுதியிலிருந்து தேவனுடைய வார்த்தை கண்டிப்பாக பிரசங்கிக்கப்பட வேண்டுமென்பதை பார்க்கிறோம். ஒருவன் இதைக் கேள்விப்பட்டு, இதை விசுவாசித்து, கிறிஸ்துவை அறிக்கையிட்டு, அத்தோடு மனந்திரும்புதல் பற்றி இங்கே விசேஷமாகக் குறிப்பிடபடவில்லை என்ற போதிலும் இங்கு தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதும் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைப்பதும் விசேஷ மான பகுதியாக இருக்கிறது அப்போஸ்தலர் நடபடிகளில் கூறப்பட்டுள்ள மனந்திரும்பலுக்கான பட்டியலோடு இதைப் பின்பற்ற வேண்டியுள்ளது, மேலும் இரட்சிக்கப்பட செய்ய வேண்டியவற்றைப் பற்றி வேதவாக்கியத்தின் வேறுபல பகுதிகளும் குறிப்பிடுகிறது. ஆனால் குறிப்பு என்னவென்றால், ஒருவன் கர்த்தருக்கு கீழ்ப்படிகையில், தன்னை இரட்சிக்கும்படி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற மீண்டும் அவன் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்கிறான், நிச்சயமாகவே கர்த்தர் ஒரு போதும் கைவிடார். பேதுரு "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் என்கிறார்" (IIபேது. 3:9).

நீங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு கர்த்தருடைய நாமத்தைத் தொழுதிருக்கிறீர்களா? இல்லை, நாங்கள் முக்கியமாக ஜெபத்தைக் குறித்து இங்கே பேசிக்கொண்டிருக்கவில்லை. கர்த்தருக்குக் கீழ்ப்படிதலைக் குறித்து ஜாக்கிரைதாயிருக்கிறோம். நீங்கள் அவருடைய சித்தத்தின்படி உங்களுடைய கீழ்ப்படிதல் மூலம் அவரைத் தொழுது கொண்டால் அவர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில்சேர்த்துக் கொள்வதின் மூலம் உங்களுக்குப் பதிலளிப்பார். இரட்சிக்கப்படும்படி வேறு வழியே கிடையாது.


**கிறிஸ்துவின் வசன மாத இதழ் தேவைப்படுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு இன்றே ஓர் அஞ்சல் அட்டையில் உங்கள் தொளிவான முகவரியுடன் எழுதியனுப்பிப்பெற்றுக்கொள்ளுங்கள்.**

The Editor
The Word of Christ
Post Box No.5
Batlagundu - 624 202 S.INDIA




# ஞானஸ்நானம் ஏன் மிக முக்கியமானது
## *Why Is Baptism so Important?*

பெண்கள் பகுதி



ஞானஸ்நானத்தின் செயல்பாட்டினை காணும்போது ஒருவர் "ஞானஸ்நானம் ஏன் முக்கியமானது?" என கேட்கலாம் இது ஒரு சடங்காசாரம் மட்டுமா? தோற்றத்தின்படி அப்படி ஒரு சடங்காசாரமானால் நாம் தேவனுடைய பிள்ளைகளாகக் கருதப்படுவதற்கு முன்பு இந்த ஞானஸ்நானத்திற்கு நாம் நம்மை ஒப்புக்கொடுக்கும்படி தேவன் ஏன் எதிர்பார்க்கிறார்?

இந்த கேள்விகள் நம்முடைய ஆழ்ந்த யோசனைக்கு பொருத்தமானதாயிருக்கிறது. அவைகளின் பதில்களைப் புரிந்துகொண்டு கோட்பாட்டின் முடிவான தோற்றத்திற்குள் செல்ல இது உதவும். பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழ் அநேக சடங்காசாரங்கள் இருந்தன என்பது உண்மை, சடங்குகள் தேவனுடைய ஜனங்களுக்கு மத்தியில் ஒரு கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை முறையை ஒருவாக்க உதவும் அதிகாரப்பூர்வ கட்டளையை ஏற்படுத்தியது. புதிய ஏற்பாட்டு கட்டளையானது சடங்காசாரச் செயல்பாட்டிற்கெல்லாம் மேலான அர்ப்பணிக்கப்பட்ட இருதயம் மற்றும் வாழ்வினை எதிர்பார்த்து சத்தியம், உண்மை, போன்றவற்றின் ஆதாரத்திற்கு தாக்குதலை ஏற்படுத்துகிறது. பின் ஏன் மாற்கு 16:16 விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என கூறுகிறது.

**ஏன் தோற்றமளிக்கிற சடங்கிற்கு இப்பேர்பட்ட முக்கியத்துவம்?**

பதிலானது இந்த ஞானஸ்நானம் மனக் கசப்பும் வெறுப்பும் நீங்கிய பிரயத்தனம் என்ற நிகழ்வில் புதைந்துள்ளது. மனிதனுக்காக கிறிஸ்துவினுடைய ஒப்புக்கொடுத்தலின் கட்டப்பட்ட நிலை சிலுவையில் அவர் மரணத்தை அனுபவித்து நம்முடைய பாவங்களை சுமந்து தீர்த்ததாகயிருந்தது. அந்நேரம்வரை அவர் கட்டப்படாதவராயிருந்தார். ஆனால் அந்நேரத்திற்கப்புறம் மனிதனுக்காகக் கட்டப்பட்டவரானார். நித்திய முழுமைக்குமான தேவனுடைய அதிகாரத்திற்கும் தேவனுடைய கரங்களின் படைப்பிற்கும் சிலுவையின் மேலிருந்த போது நடைபெற்ற சம்பவத்தினால் அவர் தாக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டார்.

தேவனுக்கு நம்முடைய ஒப்புக்கொடுத்தலை ஏற்படுத்துவதில் நாம் சரீரத்தில் மரிக்கவேண்டியதில்லை. ஆனால் நம்முடைய வாழ்வில் முன்னானவற்றையும், பின்னானவற்றையும் பிரிக்கிறதான ஒரு திருப்பம் ஏற்படவேண்டும். தேவன் இந்த வழியை திட்டம் பண்ணியிருக்கிறார். ஆனால் கிறிஸ்துவின் மரணத்தில் தம்மை ஒப்புக்கொடுத்ததுப் போல நாம் ஞானஸ்நானத்தின் மூலம் அவர் நமக்காக மரித்தார் என்றும் அவருக்கு நம்மையே கொடுக்கின்றோம் என்றும் உலகத்திற்கு நாம் புதிய சிருஷ்டியாக சாட்சியாக இருக்கின்றோம்.

தெளிவாக ஞானஸ்நானமானது சடங்குகளைக்காட்டிலும் மேலானது நம்முடைய மனப்பூர்வமான ஒப்புக்கொடுத்தல் மனந்திரும்புதல் மூலம் தேவனுடைய

சித்தத்திற்கு அடிபணிவது கெதச்மனே சம்பவத்திற்கான நம்முடைய பதிலாயிருக்கிறது போல, ஞானஸ்நானமானது கல்வாரி சம்பவத்திற்கு நம்முடைய பதிலாயிருக்கிறது. சிலுவையன்றி மனிதவர்க்கம்

| |
|---|
| **பாவியினிடத்தில் ஏற்படுகிற மனமாற்றம் அவன் தேவனால் மன்னிக்கப்பட்டிருக்கிறான் என பொருள்படுத்துகிறதா? அவன் அதிகமாக அதைச் செய்யவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறாரா?** |

முழுமைக்கும் இரட்சிப்பிற்கான வாய்ப்பே கிடையாது ஞானஸ்நானத்தின் மூலம் பழைய மனுஷனின் மரணமும் புதிய மனுஷனின் பிறப்பும் இல்லாமல் ஒரு தனிப்பட்ட ஆத்துமாவிற்கு இரட்சிப்பைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது.

வேதவாக்கியம் இந்த சத்தியத்தைக் குறித்து தெளிவாக போதிக்கிறது. ஆயினும் அதிகமான ஜனங்கள் இந்த ஒரு விஷயத்தில் இடறுகின்றனர். அநேக பிரிவினைக் கூட்டங்களின் கோட்பாடுகள் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைப் புறக்கனிக்கின்றனர்.

அதிகமான பிரசங்கியார்கள் இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் ஒன்றையும் செய்கிறதில்லை என போதிக்கின்றனர். ஏன் இந்த குழப்பம் வளர்ந்து வருகிறது ஏன் வேதவாக்கியத்தின் மிகச்தெளிவான கோட்பாடு புறக்கணிக்கப்படுகிறது.

**தேவனும் சாத்தானும் மனிதனுடைய ஆத்துமாவிற்காகப் போராடுகின்றனர்**

பதில் வெளிப்படையானது. மனிதவர்க்கத்தின் மேல் இருவர் அதிகாரமுள்ளவராயிருக்கின்றனர்: தேவனும் சாத்தானும். தேவன் நம்முடைய நித்திய இரட்சிப்பை விரும்புகிறார்; சாத்தான் தேவனிடமிருந்து நம்மை பிரிக்க விரும்புகிறான். தேவன் தம்முடைய குமாரனின் மரணத்தின் மூலமும் அவருடைய மரணத்திற்கான நம்முடைய மறுமொழி மூலமும் மன்னிப்பிற்கான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார். அந்த மறுமொழி என்பது சத்தியத்தைக் கேள்விப்படுதல், அதற்குக் கீழ்ப்படிதல், பாவ வாழ்க்கையிலிருந்து திரும்புதல், கிறிஸ்துவில் உள்ள நம்முடைய விசுவாசத்தை மற்றவர்கள் மூலம் அறிக்கையிடுதல் என்பதாகும். ஆனால் உன்னத நிலையை அடையும் செயல், அந்தச் செயல் நம்மை உலகத்தின் ராஜ்யத்திலிருந்து தம்முடைய குமாரனின் ராஜ்யத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானமாகும்.

சாத்தான் நாம் எவ்வளவு தூரம் சத்தியத்திதை ஏற்றுக் கொள்கிறோம். அதுபோல் நம்மை இரட்சிப்பதற்கு இது போதுமானது அல்ல என்பது பற்றியெல்லாம் கவலை கொள்ள மாட்டான். ஜனங்கள் தேவனிடத்தில் விசுவாசம் கொள்வது அல்லது அவரை நேசிப்பது அல்லது அவருடைய பரிசுத்த கட்டளைகளை அவர்கள் பின்பற்றுவது போன்றவற்றைப்பற்றியெல்லாம் அவனுக்கு அக்கரையில்லை. ஆனால் சாத்தானுக்கு ஒரு திருப்புமுனை ஜனங்கள் தேவனுடைய குடும்பத்தில் பிறக்கின்றதை தடைசெய்வதே ஆகும். ஞானஸ்நானத்துடன் சம்பந்தப்படுகிற புதிய பிறப்பைக் குறித்த புரிந்து கொள்ளுதலை மூடிமறைப்பதன் மூலம் அவன் நல்லெண்ணங்களுள்ள ஜனங்களை தன் சுய ராஜ்யத்தில் தக்க வைத்துக்கொள்ளுகிறான். அதனால் தான் அவன் இந்த ஒரே சத்தியத்தைத் திரித்துக் கூறும் தன்னுடைய முயற்சியில் மிக அதிகமாக கவனம் செலுத்துகிறவனாயிருக்கிறான். ✶

# கிறிஸ்துமஸ் எப்படி வந்தது?
## *How did x'mas come?*

**A.Prabagaran**

இன்றைய நாளிலே கிறிஸ்தவர்கள் என்று சொல்லும் பலர் கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடுகிறார்கள். உண்மையில் கிறிஸ்துமஸ் கிறிஸ்தவபண்டிகையே அல்ல. தமது மாம்ச பிறப்பை கிறிஸ்துமஸ் பண்டிகையாகவும், தமது உயிர்த்தெழுதலை ஈஸ்டர் திருநாளாகவும் கொண்டாடுங்கள் என்று இயேசு ஒரு போதும் கட்டளையிடவே இல்லை. அப்போஸ்தலர்களும் மற்றும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களும் இப்பண்டிகையை அனுசரித்ததாக வேதாகமத்தில் ஆதாரமும் இல்லை. ஏறக்குறைய கி.பி.ஆறாம் நூற்றாண்டு வரை இப்பண்டிகையைக் குறித்ததான எந்த சான்றுகளும் உலக சரித்திரத்தில் இல்லவே இல்லை. மத சம்பந்தமாக நடத்தப்படுகிற கிறிஸ்துமஸ், ஈஸ்டர் போன்ற பண்டிகைகள் கிறிஸ்துவம் என்ற பெயரில் கிறிஸ்துவத்திற்கு விரோதமாகவும், தேவனுடைய வார்த்தைகளுக்கு முரண்பாடாகவும் நடத்தப்படுகின்ற உலக பிரகாரமான அர்த்தமற்ற பண்டிகைகளாகும் (மத்.15:9; கொலோ.2:23).

தேவனுடைய தீர்மானத்தின்படியும், தீர்க்கதரிசிகளின் முன்னறிவிப்பின் படியும் கிறிஸ்து என்னப்பட்ட இயேசு, பாவிகளை இரட்சிக்க மனிதனாக உலகத்தில் பிறந்தார் என்ற உண்மை சரித்திரத்தை எவராலும் மறுக்கவும், மறைக்கவும் முடியாது. ஆனால், இயேசு பிறந்தபோது நடந்த சம்பவங்களையும் அன்றைய சீதோஷன நிலையையும் ஆராய்ந்து பார்த்தால் நிச்சயமாக இயேசு டிசம்பரில் பிறக்கவில்லை என்ற உண்மை புலப்படும். இயேசு பிறந்தபோது, அந்த நற்செய்தியை தேவதூதன் அன்று இராத்திரியிலே வயல் வெளிகளில் தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு அறிவித்தான். பாலஸ்தீனமாகிய யூதேயா தேசத்தில் அக்டோபருக்கு மேல் பிப்ரவரி வரையிலும் குளிர்காலமாக இருப்பதனால் இக்காலங்களில் மேய்ப்பர்கள் தங்கள் மந்தைகளை வயல்வெளிகளில் அதுவும் கடுங்குளிரான இராத்திரி நேரத்தில் காத்துக்கொண்டிருக்க வாய்ப்பில்லை. யூதேயாவில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையில்மட்டுமே மேய்ப்பர்கள் வயல் வெளிகளில் தங்கள் மந்தைகளை மேய்ப்பது வழக்கம் என்று சரித்திரம் கூறுகிறது. மேலும் அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதும்படி (மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தும்படி) அகஸ்துராயனால் கட்டளை பிறந்தபோது யோசேப்பும் தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டு கர்ப்பவதியான மரியாளுடனே நாசரேத் ஊரிலிருந்து பெத்தலகேமுக்குச் சென்றான் என்று படிக்கிறோம். அதாவது போக்குவரத்து வசதி அதிகம் இல்லாத அந்நாட்களில் ஜனங்கள் குடிமதிப்பு எழுதுவதற்காக அவரவர் தங்கள் தங்கள் ஊர்களுக்குச் செல்லும்போது கால்நடையாக நடந்து சென்றும், மற்றும் இரவு நேரங்களிலும் பயணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். இதை கருத்தில் கொண்டு மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள அகஸ்துராயன் ஜனங்களுக்கு ஏற்படும் சிரமத்தை தவிர்ப்பதற்காகவே கண்டிப்பாக குளிர்காலங்களில் இக்கட்டளையை பிறப்பித்திருக்க முடியாது (லூக்கா 2:1-18).

(தொடரும்....)

## ஒரே வழிப்பாடத்தை எப்படி பெற்றுக்கொள்வது?

ஒரே வழி பாடத்தை பெற்றுக்கொண்டவருடைய மாதிரி இதோ.

"கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும் நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தம்செய்யும்" -சங்8:10

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர்கள் யாவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துக்களையும் ஸ்தோத்திரங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. ஒரே வழி வேதபாடம் The Master Course படிக்க விரும்புகிறேன். இதற்குண்டான தபால் செலவு ரூ.15-ஐ அனுப்பியுள்ளேன். பெற்றுக்கொண்டு பாடங்களை அனுப்பிவையுங்கள்.

எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எனது முகவரி பின் பகுதியில் உள்ளது. உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்-யோ.1:9

R.ஆனந்தகுமார், ஈரோடு.


## மாத இதழின் சந்தாவை புதுப்பிக்க இதோ வழி

ஒரு அஞ்சல் அட்டையில்

1. எத்தனை வருடங்களாக இதழைப் பெறுகிறீர்கள் :
2. குடும்ப அங்கத்தினர் :
3. செல்லுகின்ற சபை :
4. இவ்விதழைக்குறித்து உங்களுடைய கருத்து என்ன? :
5. உங்கள் பதிவு எண் :

ஆறு மாதத்திற்கு ஒரு முறை ரூ.25 செலுத்தி, எளிய முறையில் உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

## ஜெபியுங்கள்



* இம்மாதம் சிவகங்கையில் நடக்கும் 22வது வாசகர் கருத்தரங்கிற்காக...
* டிவி மற்றும் வானொலி ஊழியங்களுக்காக...
* வேதாகமக் கல்லூரிக்காக...
* நம்மோடு இணைந்து செயல்படுகிற பத்துமாவட்ட ஊழியர்களுக்காக...
* நமது இதழில் தாவீது யோனத்தான் பகுதி எழுதிவரும் சகோ.எபிநேசருடைய சுகத்திற்காக...

### ஆன்மீக ஆலோசனை

"பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது" -சங்.103:11.

# வேதாகம ஆலோசனை

**"இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும். புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்; விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதை பொருள்களையும் அறிந்துகொள்வான்"(நீதி.1:4-6)**

**வேதாகம ஆராய்ச்சி பாடம்-3**

**2. மறுபிறப்பைக் குறித்து உங்கள் நிலை என்ன?**

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (2கொரி.5:17). மறுபிறப்பைப் பெற்றவர்கள் கிறிஸ்துவுக்குள் புதுச்சிருஷ்டி என வேதாகமம் போதிக்கிறது. அவர்களுடைய பழைய ஜீவியம் ஒழிந்துபோகிறது எல்லாம் புதிதாகிறது.

"ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலிலும் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" (ரோம.6:1-6). இப்படிப்பட்டதான நம்பிக்கை உங்களில் இருக்குமானால் பழைய ஜீவியத்திற்கு திரும்பாதிருங்கள்.

"ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" (ரோம.6:12). அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நாம் நம்முடைய அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் காமவிகாரத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்து இருந்தோம். இப்பொழுது பரிசுத்தத்தை நடப்பிக்கும்படியாக நம்முடைய அவயவங்களை நீதிக்கு, அதாவது ஆண்டவருக்கும், அவருடைய திரு வசனத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள். மறுபிறப்பைக் குறித்த உங்களுடைய நிலை இப்படிப்பட்டதாக இருக்கட்டும்.

## பேசும் வேதாகமம் : 17

1. மனுஷனுடைய நாட்கள் எதற்கு ஒப்பாயிருக்கிறது? – புல்லுக்கு – சங்.103:15.
2. புத்திமதிகளைக் காத்துக் கொள்ளுகிறவன் எவ்வழியில் இருக்கிறான்? – ஜீவவழியில் – நீதி.10:17.
3. மனுஷன்படும் பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காகத்தானே அவன் மனதுக்கோ என்ன இல்லை? – திருப்தியில்லை – பிர.6:7.
4. நான் கர்த்தர் இது என் நாமம் என் மகிமையை வேறொருவனுக்கும் என் துதியை எவைகளுக்கும் கொடேன்? – விக்கிரகங்களுக்கும் – ஏசா.42:8.
5. எல்லாவற்றைப்பார்க்கிலும் எதுவே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது? – இருதயமே – எரே 17:9.
6. கர்த்தருடைய இரட்சிப்புக்கு எப்படி காத்திருக்கிறது நல்லது? – நம்பிக்கையோடு – புல. 3:26.
7. சாகிறவனுடைய சாவை கர்த்தர் என்னசெய்கிறதில்லை? – விரும்புகிறதில்லை – எசே.18:32.
8. அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் எவைகளைப்போல என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்? – நட்சத்திரங்களைப்போல – தானி.12:3.
9. வேசித்தனமும் திராட்சரசமும் மதுபானமும் எதை மயக்கும்? – இருதயத்தை – ஓசி.4:11.
10. நியாயத்தீப்பின் பள்ளத்தாக்கிலே யாருடைய நாள் சமீபமாயிருக்கிறது? – கர்த்தரின் – நாள் – யோவா. 3:14.

## பொது அறிவுச் சோதனை

1. நெம்புகோல் தத்துவத்தை உருவாக்கியவர் யார்?
   அ) ஆர்க்கிமிடிஸ் ஆ) கெல்வின் இ) கிரகாம்பெல்
2. கடல் நீரிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படும் திட்டம் நமது நாட்டில் முதன் முதலாக எங்கு தொடங்கப்பட்டது?
   அ) குஜராத் ஆ) மும்பை இ) லட்சத்தீவில்
3. ஆண்டுக்கு 365 நாட்கள் என்ற காலண்டர் முறையை முதன் முதலில் பயன்படுத்தியவர்கள்?
   அ) எகிப்தியர்கள் ஆ) சீனர்கள் இ) இந்தியர்கள்
4. கம்ப்யூட்டரில் உள்ள சிப்ஸ்கள் எதனால் செய்யப்பட்டது.
   அ) குரோமியம் ஆ) வெள்ளி இ) சிலிகான்
5. இந்தியாவிற்கு அதிக வருவாய் தரும் பொதுத்துறை எது? அ) தொலைப்பேசிதுறை ஆ) அனல் மின்சாரநிலையம் இ) ரயில்வேதுறை

விடைகள்:
1. கிரகாம்பெல்
2. குஜராத்
3. எகிப்தியர்கள்
4. சிலிகான்
5. ரயில்வேதுறை

## வேதஅறிவுப்போட்டி எண் 67-ல் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| G.வசந்த நிலா | -மனுமாச்சம்பட்டி | S.ஜெயராணி | -மேல்வாள்பட்டி |
| N.ஜான் செல்லையா | -செட்டியாளையம் | R.ஆனந்தகுமார் | -கடுக்கம்பாளையம் |
| G.கிரேஸ்ஜெயா | -வெள்ளகுளம் | G.P.ஏசையன்ராஜ் | -கோபி |
| J.S.நிர்மலாஜான் | -மதுரை | S.பேபிபுனிதாராணி | -பொன்னமங்களம் |
| M.குணசேகரன் | -கோட்டக்கல் | R.பிளசன் | -நாகை |
| A.இராபர்ட்கிளைவ் | -சிலுவத்தூர் | R.ராமதாஸ் | -சென்னை |
| Mrs.வனிதாசாமுவேல் | -மதுரை | N.கமலவேணி | -சென்னை |
| V.ஜாஸ்மின்வின்செட்ராஜ் | -மதுரை | S.பிரிசில்நேசகுமாரி | -நெல்லை |
| S.சாம்பிச்சை | -நாகமலை | y.யேசுதாஸ் | -சித்தூர் (AP) |
| K.மோகன் | -பி.கொமாரபாளையம் | S.ஆனந்தராஜ் | -ஈரோடு |
| S.ஸ்டீபன் | -காங்கயம் | P.A.தமயந்தி | -தூத்துக்குடி |
| P.முத்துமதி | -நாராணபுரம் | A.ரீட்டா | -வண்டிபெரியார் (KL) |
| C.H.வித்தியாராணி | -சென்னை | C.சாந்தி | -கற்கோயில் |
| P.S.லலிதாபிரேமகுமாரி | -மதுரை | S.சுதா | -செல்லப்பம்பாளையம் |
| Ref.No.1512 | -மதுரை | S.சுந்தரி | -சென்னை |
| ஆனந்த் | -வடிவேல்கரை | G.பூங்கோதை | -வெள்ளாளபாளையம் |
| A.மரிபெர்னார்ட் | -பாண்டிச்சேரி | R.சரோஜா | -சில்வர்புரம் |
| N.பிரபாகரன் | -வெங்கம்பூர் | A.சேவியர்மேரி | -மதுரை |
| E.கார்த்திக்ராஜா | -செட்டிபாளையம் | V.அனிதா | -சொக்கலிங்கபுரம் |
| E.ஜோசப்தேவதாஸ் | -நாகமலை | P.அலிஸ் மேரியம்மாள் | -வத்தலக்குண்டு |
| C.ஜாய்கிறிஸ்டினா | -நாகமலை | L.S.ஆபிரகாம் | -மும்பை (MH) |

### என் சிநேகிதர்



பல வருடங்களாகத் தேடினேன் தேடினேன்
ஒரு சிநேகிதனை இப்பூவில்
ஒருவனையும் நான் காணவில்லை;
சிநேகிக்க ஒரு காலமுண்டு அப்படியே
பகைக்க ஒரு காலமுண்டு என்பதைப்போல
பகைஞர் ஆயினர் நான் சிநேகித்தவர்கள்!
ஏனோ தெரியவில்லை
என்னை ஒருவர் சிநேகிக்கிறார் என்பதைக் கண்டு
கொண்டேன் அவர் அருளிய வேதத்தில்!
எல்லாக் காலங்களிலும் சிநேகிக்கும் அவரை
ஏற்றுக்கொண்டேன் என் சிநேகிதராய்
அன்று முதல் இன்றுவரை அவரே
என் சிநேகிதர்
என் வழிகாட்டி
என் மேய்ப்பர்
என் ஆலோசகர்
என் ஆண்டவர் -என
அறிந்து கொண்டேன் என் ஆத்தும நண்பரை!
அறிவீரா மானிடனே
அவரே உன் ஆண்டவர் என்று!
ஏற்பாயா உன் உள்ளத்தில்
என் சிநேகிதர் ஏசுவை இன்று!

-ஆசிரியர்


ஒ ரே வ ழி

'ஒரேவழி' வேதபாடம்

The Master Course படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செல்வுக்காக ரூபாய்15-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று Certificate பெற்றுக்கொள்ளுங்கள்
வயது: 20 க்கு மேல். குறிப்பு: தபால் செலவுக்கான மேற்குறிப்பிட்டுள்ள ரூ.15/-ஐ அனுப்புகிறவர்களுக்கு மட்டுமே இந்தப் பாடம் அனுப்பி வைக்கப்படும்.

**Batlagundu Bible College**
**Post Box 5, Batlagundu-624 202**
**S.INDIA**

பாடம் - 3

# சபையில் உதவிக்காரர்கள்

## Deacons in the Church

**J.C.Choate**

முந்திய பாடத்தில் சபையில் மூப்பர்கள் பற்றியும் அவர்கள் யார், அவர்களுடைய தகுதிகள் மற்றும் அவர்கள் பணிகள் குறித்து பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக இப்பொழுது சபையில் மூப்பர்களைக் குறித்து படிக்க விரும்புகிறோம்.

மூப்பன் யார்? வேத வாக்கியங்களின் படி அவன் ஒரு சேவகன் - ஆவிக்குரிய சேவகன். அப்போஸ்தலர் 6-ம் அதிகாரத்திலே அப்போஸ்தலர்களுக்கு உதவும் படியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையே உதவிக்காரர்களின் வேலைக்கு மாதிரியாக எடுத்துக்கொள்கிறோம். அந்த வேதப்பகுதியிலே அவர்கள் உதவிக்காரர்கள் என்று குறிப்பிடப்படாவிட்டாலும் அவர்கள் உதவிக்காரர்கள் செய்ய வேண்டிய வேலையே செய்ததாக தெரிகிறது.

பவுல், 1 தீமோ 3ம் அதிகாரத்தில் மூப்பர்களின் தகுதிகளை பட்டியலிட்டபின்பு 8 முதல் 13 வசனங்களில் உதவிக்காரர் தகுதிகளையும் குறிப்பிடுகிறார். "அந்தப்படியே உதவிக்காரரும் இரு நாக்குள்ளவர்களாயும் மதுபானப்பிரியராயும் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும், இராமல் நல்லொழுக்கமுள்ளவர்களாயும் விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக் கொள்ளுகிறவர்களாயும் இருக்க வேண்டும், மேலும் இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்படவேண்டும், குற்றஞ்சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ் செய்யலாம். அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்க முள்ளவர்களும் அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும் எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டும், மேலும் உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்த குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும், இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தால் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்" (1தீமோ 3:8-13).

பவுலுடைய வார்த்தைகளில் நீங்கள் காண்கிறபடி மூப்பர்களைப் போலவே யார் வேண்டுமானாலும் உதவிக்காரராக இருக்க முடியாது, மூப்பர்கள் மற்றும் உதவிக்காரருடைய தகுதிகளும் செயல்பாடுகளும் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டு இருந்தாலும் இயல்பாகவே மூப்பர்களும் உதவிக்காரும் தங்களுக்குள்ள மிக நெருக்கமான உறவு உள்ளவர்களாக இருக்க வேண்டும், அவர்கள் அப்படியே இருக்கிறார்கள்,

மூப்பர்களுடைய கவனம் சபையினுடைய ஆவிக்குரிய தேவைகளை சந்திப்பதாக இருக்கிறது என்றும் உதவிக்காரருடைய வேலை சபையினுடைய சரீரபிரகாரமான தேவைகளை கவனிப்பதாக இருக்கிறது என்றும் பார்த்தோம், அப் 6-ம் அதிகாரத்திலே அப்போஸ்தலர்கள் தங்களுக்கு உதவும்படி ஏழுபேரை

தேர்ந்தெடுத்ததற்கான காரணத்தை சொல்லியிருப்பதை நினைத்துப் பாருங்கள்? அவர்கள் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதை காட்டிலும் மனிதர்களுடைய சரீரபிரகாரமான தேவைகளை சந்திப்பதிலேயே தங்கள் நேரத்தை செலவிடும்படியாக ஆயிற்று. அந்த ஏழுபேரும் சரீர தேவைகளை சந்திப்பதிலே உதவும்படியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்படியாக அப்போஸ்தலர்கள் ஆவிக்குரிய தேவைகளில் தங்கள் கவனத்தை செலுத்த ஏதுவாக இருந்தது. இந்த வண்ணமாகவே மூப்பர்கள் உதவிக்காரர்களும் செயல்பட்டார்கள்.

மூப்பர்கள் சபையினுடைய ஆவிக்குரிய தேவைகளை கவனித்து சுவிஷேசம் போதிக்கப்பட்டு, சபையானது பரிசுத்தமாக காக்கப்படும்படி கவனமாயிருக்கிறார்கள். உதவிக்காரர் மூப்பர்களுக்கு உதவும்படி சபைக்கு எந்தெந்த வகையிலே உதவ முடியுமோ அந்தந்த வகையிலே உதவும்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சபையிலே ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான தேவைகள் இருப்பதினாலே, குறிப்பாக மூப்பர்கள் ஆவிக்குரிய தேவைகளை கவனிக்கவும் பின்பு அவர்கள் உதவிக்காரர்களை சபையாருடைய தேவைகளை கவனிக்கும்படியும் அல்லது வேறு எந்த வழியிலாகிலும் உதவியாயிருக்கும்படியும் சொல்லலாம். எடுத்துக்காட்டாக சபையானது வாடகைக்கு எடுக்கப்பட்ட இடத்திலோ, அல்லது சொந்தமான இடத்தலோ கூட வேண்டும் என்று இருந்தால் அதற்குரிய ஏற்பாடுகள் மற்றும் அந்த இடத்தை கவனித்தல் போன்ற பொறுப்புகள் உதவிக்காரர்களிடத்திலே ஒப்படைக்கலாம். அவர்கள் மிகவும் கஷ்டத்தில் அல்லது வியாதியாயிருக்கிற சபை அங்கத்தினருக்கு உணவு அளிக்கும்படியாகக்கூட ஏற்பாடு செய்யலாம். மூப்பர்களாகவும் உதவிக்காரராகவும் இருக்கிறவர்கள் கண்டிப்பாக குறிப்பிட்ட தகுதிகளை உடையவர்களாகயிருக்க வேண்டும். அது அவர்கள் செய்யும்படியாக நியமிக்கப்பட்ட வேலையை சரீரப்பிரகாரமாகவும், நன்னடத்தையின் படியாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் செய்ய தேவையான தகுதியுள்ளவர்களாகயிருக்கிறார்கள் என்பதை உறுதி செய்யும்.

இந்த இரண்டிலும் ஆண்கள் மட்டுமே நியமிக்கப்படும்படியான நிலையில் இருக்கிறார்கள். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் இரண்டு அதற்கு அதிகபடியான ஆண்கள் கண்டிப்பாக நியமிக்கப்பட வேண்டும் ஒருவர் மட்டுமே மூப்பர்ஆவதற்கு தகுதியுடையவராக இருந்தால் அப்படிப்பட்டவரை நியமிக்க முடியாது. உதவிக்காரர்களை நியமிப்பபதிலும் அப்படியே. உதவிக்காரர்கள் உதவியாகயிருக்க வேண்டியிருப்பதால், மூப்பர்கள் இல்லாவிட்டால் உதவிக்காரர்களும் இருக்கமுடியாது.

மூப்பர்களாகவும், உதவிக்காரர்களாகவும் இருப்பதற்கு இத்தகைய தகுதியாம்சங்கள் சந்திக்கப்பட வேண்டும் என்று இருப்பதால் ஒருவர் தன்னை ஒழுங்கற்றவராக நடத்தினால், அதாவது ஒழுக்க கேடு உள்ளவராகவோ, அல்லது தேவனுடைய சட்டத்தை வேறு எந்த வகையிலும் மீறுபவராக இருந்தாலோ அவர் அந்த பதவியிலிருந்து நீக்கப்பட்டு மறுபடி ஒருபோதும் மூப்பராகவோ, உதவிக்காரராகவோ அடையாளம் காணப்பட முடியாது. இவைகள் ஆயுள் கால

வேலைகள் அல்ல ஆனால் எதுவரையிலும் அந்த தகுதிகள் சந்திக்கப்பட முடியுமோ அது வரையிலும் அந்த பொறுப்புகளை வகிக்கலாம். உதவிக்காரராயிருப் பதற்கான தகுதியம்சங்களை சற்று ஆழமாக பார்ப்போம். பவுல் சொல்கிறார் உதவிக்காரராகயிருப்பவன் மிகவும் ஜாக்கிரதையுள்ளவனாகயிருக்க வேண்டும். இருநாக்கு உள்ளவனாகயிருக்க கூடாது. அதாவது ஒரு நேரம் ஒன்றும் அடுத்த நேரம் இன்னொன்றுமாக பேசக்கூடாது. வேறு வார்த்தைகளில் சொல்வது என்றால் மற்றவர்கள் அவனை நம்பும்படியாகவும் அவன்மீது நம்பிக்கை வைக்கும்படியாகவும் பேசவேண்டும். அவன் செய்ய வேண்டிய வேலையை செய்யக்கூடாதபடி மற்றவர்களுக்கு தன்னை ஒரு மோசமான மாதிரியாக காண்பிக்காதபடி (மது) குடிக்கிறவனாகவோ, (மதுபான) குடிகாரனாகவோ இருக்ககூடாது. அவன் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாகவோ, பணம் அல்லது உலகப்பொருட்கள் மீது ஆசையுள்ளவனாகவோ இருக்க கூடாது. அப்படிப்பட்ட காரியங்களை இச்சிப்பவனானால் வாழ்க்கைப்பற்றிய அவனுடைய தவறான முக்கியத்துவம் மற்றவர்களுக்கு தெளிவாகவும், அப்பொழுது அவன் ஆவிக்குரியவன் அல்ல என்பதை கண்டுக்கொள்வார்கள் அவன் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனும், எப்பொழுதும் சுத்த மனசாட்சியுள்ளவனுமாக இருக்க வேண்டும். அவன் விசாரிக்கப்பட்டு சோதிக்கப்பட்டவனாகயிருக்க வேண்டும். அவன் நம்பத்தக்கவனும் தவறான அல்லது மோசமானவைகளை செய்தவன் என்று குற்றம் சாட்டபடாதவனாகயிருக்கவேண்டும்.

இத்தகைய தகுதிகள் உதவிக்காரனுக்கு மட்டும் அல்ல அவனுடைய மனைவிக்கும் உண்டு. அவள் உண்மையுள்ளவளாக புறம் பேசாதவளாக அல்லது மற்றவர்களை குறித்து கட்டு கதைகள், தகாத காரியங்கள் பேசாதவளாக இருக்க வேண்டும். அவள் தன்னுடைய செயல்களில் ஜாக்கிரதையும் எல்லாவற்றிலும் விசுவாசமுடையவளாகவும் இருக்க வேண்டும்.

உதவிக்காரராகயிருப்பவர்கள் ஒரு முறை மட்டுமே திருமணம் செய்தவராயிருக்கவேண்டும். அதாவது விவாகரத்து ஆகி மறு மணம் புரிந்து இப்படியாக திருமணத்தில் குழப்பம் இருக்கக் கூடாது. மற்றவர்களுக்கு மாதிரியாகயிருக்கும்படி தன் பிள்ளைகளையும் குடும்பத்தையும் ஆளவும், நடத்தவும் வேண்டும். இந்த தகுதிகளையுடையவர்களாக இருந்து, அவர்கள் உதவிக்காரராக தேர்ந்தெடுக்கப்பட்டு, விசுவாசமுள்ளவர்களாயிருந்தால் கர்த்தருடைய காரியங்களுக்காக மிகவும் பிரயோஜனமாகயிருப்பார்கள்.

பிலிப்பு பட்டணத்தில் உள்ள சபையின் மூப்பர்கள் உதவிக்காரர்களை குறித்து பவுல் இப்படியாக எழுதியிருக்கிறார் (பிலி 1:1-2) எல்லா சபைகளுக்கும் இது ஒரு நல்ல மாதிரி இயற்கையாகவே, வேத வசனங்களில் சொல்லப்பட்டுள்ள தகுதிகளின்படி மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் நியமிக்கக் கூடிய, நிலையிலிருக்கும் சபைகள் கர்த்தருக்கென்று பெரிய காரியங்களை செய்வார்கள். தலைமைத்துவத்தை பொறுத்தவரையில் எங்கும் உள்ள சகோதரர்கள் கர்த்தருடைய விருப்பத்திற்கு ஒத்திருக்கும்படி போராடி பிரயாசப்படவேண்டும்.

## பாவத்திலிருந்து விலகியே இருங்கள்

1. பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக - யாத்.20:17
2. பாவமானது சமயம் பெற்றுச்சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது - ரோமர்.7:8.
3. கடைசி காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர்கள் தோன்றுவார்கள் - யூதா.1:18.
4. மோசம் போக்கும் இச்சைகளால் கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு - எபே.4:22.
5. தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல் - 1 தெச. 4:4.
6. இச்சைகளுக்கு நீ விலகியோடி சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்... - 2 தீமோ.2:22.
7. நீதிமானும் பரிசுத்தவானும் இச்சையடக்கமுள்ளவனு... - தீத்து 1:8.
8. அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து - தீத்து.2:12.
9. அவனவன் தன்தன் சுய இச்சையினால் இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான் - யாக்.1:14.
10. இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கும் - யாக்.1:15.
11. உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின் படி இனி நடவாமல் கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து... - 1 பேதுரு.1:14.
12. ஆத்மாவுக்கு விரோதமாய் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி... - 1 பேதுரு 2:11.
13 தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான் - 1 யோவான்.3:9.
14. ஞானத்தோடே இச்சை அடக்கத்தையும் இச்சை அடக்கத்தோடே பொறுமையையும்... கூட்டி வழங்குங்கள் - 2பேதுரு.1:6.
15. மாம்சத்தின் இச்சையும் கண்களின் இச்சையும் பிதாவினால் உண்டானவைகளல்ல - 1யோவான்.2:16.

*M. இராஜாமணி*

### வேதஅறிவுப்போட்டி எண் 67-ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. ராகாப் | -யோசு.2:15 | 6. மோசே | -அப்.7:36 |
| 2. மிரியாம் | -எண்.12:10 | 7. ஆபிரகாம் | -ரோம.4:21 |
| 3. ஐம்பதாம் | - லேவி.25:11 | 8. ஆமென் என்றும் | -2கொரி 1:20 |
| 4. கெர்சோம்,எலியேசர்,மோசே | -யாத்18:3.4 | 9. காலத்தை | -கொலோ.4:5 |
| 5. ஒழிவதில்லை,தேவன் | - ஆதி.8:22 | 10. ஏற்படுகிறதில்லை | -எபி.5:4 |

பெண்கள் பகுதி

# தேடுங்கள்– SeeK

*J.Glory Arjunan*



இன்றைய நாட்களில் ஜனங்கள் எதை எதையோ நாடித் தேடுகிறார்கள். சிலர் நல்ல உத்தியோகத்தை தேடுகிறார்கள், சிலர் பட்டங்கள், பதவிகளை நாடுகின்றனர். சிலர் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல வரன்களைத் தேடுகின்றனர். சிலர் ஓயாது காலை முதல் மாலை வரை உணவுக்காகவும், உடைக் காகவும் அலைந்து திரின்றனர். சிலர் உலக சம்பத்தைத் தேடுகிறார்கள் . சிலர் சமுதாயத் தில் ஒரு பெரிய ஆளாக மாறவேண்டுமென உலக மேன்மையை நாடுகின்றனர். இப்படி அழிந்து போகின்றவை களையே தேடிக்கொண்டிருக்கிறவர்களைப் பார்த்து வேதம் உலகத்தார் என்றும், அஞ்ஞானிகள் என்றும் இழித்துரைக்கிறது.

அன்பு சகோதரிகளே, "......இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" (மத்.6:32). "ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும் அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத்.6:34). அநேகர் இரட்சிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும் இன்னும் உலத்தாரைப் போலவும், அஞ்ஞானிகளைப் போலவும் இப்படிப் பட்டவைகளையே நாடித்தேடுகிறார்கள். தேவன் "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்ப தெப்படி?" (ரோம.8:32).

**கர்த்தரைத் தேடுங்கள்:**

"உன் தேவனாகிய கர்த்தரைத் தேடு....." (உபா.4:29) என வேதம் கூறுகிறது. உங்களை உண்டாக்கி அனுதினமும் உங்களைக் காத்துவருகிற கர்த்தரைத் தேடுங்கள். முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கர்த்தரைத் தேடுங்கள். அவரே உங்கள் இரட்சகர், அவரே உங்களை சிருஷ்டித்தவர், அவரே உங்களைக் காண்கிறவர், அவரே உங்களை சகல தீமையினின்றும் விடுவிக்கிறவர். அவரே உண்மையுள்ளவர், அவரே உயிருள்ளவர், அவரே நித்திய பிதா. ஆகவே அவரையே தேடுங்கள். வீணானவைகளை நாடித்தேடி ஏமாந்து போகாதீர்கள். மேலும் "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்;" (ஏசா.55:6). அதிகாலை என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" (நீதி.8:17) என வேதம் கூறுகிறது. ஆம்,

நம்முடைய அனுதின பாடுகளில் தேவன் நம்மோடிருக்கும்படிக்கும், நம்முடைய காரியங்கள் யாவும் கைகூடி வரும்படிக்கும் நாம் சோதனைக்குட்படாத படிக்கும் அதிகாலையிலே கர்த்தரைத் தேடுவோம். தேவ ஆசீர் பெறுவோம்.

**கர்த்தருடைய முகத்தைத் தேடுங்கள்:**

கர்த்தர் நமக்கு ஷேமத்தைக் கொடுக்கும்படிக்கு அவருடைய முகத்தைத் தேடுங்கள் என்று 2நாளா.7:14 கூறுகிறது. நாம் ஷேமத்துடனிருப்பது தேவசித்தம். ஆனால் அநேகர் ஷேமம் அடையும்படி அருடைய முகத்தைத் தேட மறந்து விடுகின்றனர். மனுஷருடைய தயவையே நாடி ஓடுகின்றனர். ஜெபிக்க நேரமில்லையென்று கூறி கர்த்தருடைய முகத்தைத் தேடாமல் இரவெல்லாம் தங்களுடைய விருப்பத்தையே நிறைவேற்றும்படி திட்டமிட்டு அதிகாலையில் அதே நினைப்போடு எழுந்து உலகத்தாரைப் போல அழிந்து போகின்றவற்றையே தேடிச் செல்லுகின்றனர். காரியம் வாய்க்காமல் திரும்புகின்றனர். அல்லது காரியம் வாய்த்தாலும் அது அதிசீக்கிரத்தில் அழிந்து போகக் கூடிய அநித்தியமானவை என்பதை மறந்து முடிவிலே ஏமாற்றமடைகின்றனர். தாவீது ராஜா 'அவர்கள் அவரை நோக்கிப் பார்த்து பிரகாசமடைந்தார்கள். அவர்கள் முகங்கள் வெட்கப்பட வில்லை' (சங்.34:5) என்று பாடுகிறான். நாமும் கர்த்தருடைய முகத்தை நோக்கிப்பார்த்து பிரகாசமடை வோமாக!

**தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள்:**

"தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (லூக்.12:31) என வேதம் கூறுகிறது. மத்.6:32-ம் கூட "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை...... தேடுங்கள், அப்பொழுது இவைகளைல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" என்கிறது. இங்கு தேவனுடைய ராஜ்யத்தை மட்டும் தேடுங்கள், அதையும் முதலாவது தேடுங்கள் என்று அறிவுறுத்திக் கூறப்படுவதை சற்று சிந்திக்கவேண்டும். அஞ்ஞானிகளைப் போல உலகக்காரியங்களையே நாடித்தேடுவதை தேவன் விரும்புகிறதில்லை. தம்முடைய பிள்ளைகள் தம்முடைய வார்த்தைகளை விசுவாசித்து தம்முடைய ராஜ்யத்தையே தேடும்படி விரும்புகிறார். அவருடைய விருப்பத்தின்படி செய்யும் போது நமக்கு வேண்டியவைகள் எல்லாவற்றையும் அவர் அருளிச்செய்வார். அன்பு சகோதரியே, இன்னும் உலகம் உலகம் என்று உலகத்தையே நாடி முடிவிலே கவலைப்பட்டு கலங்குவதை நிறுத்துங்கள். தம்முடைய சொந்தகுமாரனையே ஒப்புக்கொடுத்து உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர். அன்று இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் அடிமைப்பட்டு அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக் கொண்டிருந் தார்கள். தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு

அவர்களை நினைத்தருளி அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். அவர்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்குக் கொண்டுபோவேன் என்று சொல்லி அழைத்தார். அழைத்தவர் அவர்களை நாற்பது வருடங்களாகப் போஷித்து குறைவின்றி வழிநடத்திச் சென்றார். அதன்பின் தாம் வாக்களித்த வண்ணம் தம்மை விசுவாசித்த வர்களை பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்குற் கொண்டு போய் சேர்த்தார். ஆம் உங்களை அழைத்தவரும் அவரே! அவர் உங்களைப் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து பரம கானானாகிய பரலோகத்திற்குக் கொண்டு செல்லும்படி அவருடைய ராஜ்யத்தையே தேடுங்கள் என்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள். சபையாகிய இந்த ராஜ்யத்தைத் தேடும்போது நீங்கள் போஷிக்கப்படுவீர்கள். குறைவின்றி நடத்திச்செல்லப்படுவீர்கள். ஏனெனில் கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார் (எபே.5:29). சபையாகிய ராஜ்யத்தைக் குறித்த வைராக்கியம் உங்களுக்குள் இருக்கட்டும். சபையை அலட்சியம் செய்யாதீர்கள். விசுவாசத்தில் நிலைத்திருக்கிறவர்கள் மட்டுமே பரம கானானுக்குள் சேர்க்கப்படுவர்.

**கர்த்தரைத் தேட இதுவே காலம்:**

"......கர்த்தர் வந்து உங்கள் மேல் நீதியை வருஷிக்கப்பண்ணும் மட்டும், அவரைத் தேடக்கால மாயிருக்கிறது" (ஓசி.10:12) என வேதம் கூறுகிறது. கர்த்தர் உங்கள் பிரயாசங்களுக்கேற்ற, பலனை வருஷிக்கப்பண்ணும் வரைக்கும் அவரைத்தேடக்காலமா யிருக்கிறது. ஆம், காலம் சமீபித்து வருகிறபடியால் இதுவே அவரை தேட வேண்டிய சமயமாயிருக்கிறது. அன்பு சகோதரியே, நீ ஒருவேளை கர்த்தராகிய உன் சிருஷ்டிகரைத் தேடாமலிருக்கலாம். தாமதிக்காதே. "....இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்". எனவே இன்றே அவரைத் தேட வேண்டிய காலமாயிருக்கிறது. இன்று அவரைத் தேட தாமதிப்பாயானால் இம்மையிலும் மறுமையிலும் அநேக ஆசீர்வாதங்களை இழந்து போவாய். கர்த்தர் வந்து உங்கள் மீது நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும் அவரைத் தேட காலமாயிருக்கிறது.

அன்பு சகோதரிகளே, தேடுங்கள் அப்பொழுது உங்களுக்குத் தேவையானவைகள் எல்லாம் கூடக் கொடுக்கப்படும். உலகத்தாரைப் போல அல்ல. ராஜ்யத்தின் பிள்ளைகளாய் விசுவாசத்துடன் "....தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்......" (மத்.7:7). "என்னைத் (கர்த்தரைத்) தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள்" (ஆமோ.5:4) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே கர்த்தருடைய ஆசீர்வாதங்களைக் கண்டடையும்படிக்கும், நீங்கள் பிழைத்திருக்கும்படிக்கும் கர்த்தரைத் தேடுங்கள், கர்த்தருடைய முகத்தைத் தேடுங்கள், தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், கர்த்தரைத் தேடக் காலமாயிருக்கிறபடியால் இன்றே தேடுங்கள்.




# சீமோனே! சீமோனே

*வேதபகுதி: லூக்கா.21:31-32*



இந்த வார்த்தையை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பேதுருவைப் பார்த்து சொன்னார். பேதுருவுக்கு மற்றொரு பெயர் சீமோன் என்பது உங்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன்.

சீமோனே, சீமோனே இதோ கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் (அதாவது பிசாசு) உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன். நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். பள்ளியிலே சிலர் முந்தி முந்தி பேசுகிறவர்களை பார்த்து இருப்பீர்கள். இவர்களுக்கு முந்திரிக்கொட்டை என்று பெயர் அதைப்போல பேதுருவும் பன்னிரண்டு சீஷர்களிலே ஒருவராக இருந்தார். ஆகையால்தான் ஆண்டவர் அவரைப்பார்த்து இவ்விதமாக சொன்னார்.

நாமும் சில வேளைகளில் நம்மை நாமே கவனிக்காமல் மற்றவர்களை பார்ப்போம். முதலாவது நம்மை சரிசெய்ய வேண்டும். இல்லையென்றால் பிசாசு கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல நம்மையும் புடைக்க ஆண்டவரிடம் உத்தரவு கேட்டுக்கொள்வான். புடைக்கும்போது நாம் பதரைப் போல விசுவாசம் உடையவர்களாக இருந்தோமானால் பறந்தே போய்விடுவோம். நல்ல கோதுமை மணிகளைப்போல உறுதியான விசுவாசமுடையவர்களாக இருப்போமானால் பிசாசு நம்மைப் புடைக்கும்போது சுளகிலே இருப்போம் அப்படியென்றால் கர்த்தரோடு இருப்போம். ஆகையால் நாம் சரியான பிறகு நம் சகோதரர்களை ஸ்திரப்படுத்த வேண்டும்.

நம்முடைய விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு நமக்காக கர்த்தர் வேண்டுதல் செய்யக்கூடியவராக இருக்கிறார். நம்முடைய விசுவாசத்தை கர்த்தர் அறிந்தவராகவும் இருக்கிறார். அதேபோல பேதுருவின் விசுவாசத்தை அறிந்த ஆண்டவர் உனக்காக வேண்டிக்கொண்டேன் என்றார். ஒருவேளை கர்த்தர் வேண்டிக்கொள்ளாதிருந்தால் பிசாசு புடைக்கும்போது பதரைப்போல பேதுரு பறந்தேபோய்இருப்பார். ஆகையால் நீ குணப்படு என்றார். நாமும் முதலாவது குணப்பட்டு பின்பு மற்றவர்களை குணப்படுத்துவோம். அப்படியென்றால் நாம் சரியானபிறகு மற்றவர்களை சரிசெய்வோம். செய்வீர்களா?

**மனப்பாட வசனம்:**

**“உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்” (லூக்.21:19).**

## வேத அறிவுப் போட்டி எண்-68

*போட்டியாளர்கள் கவனத்திற்கு.*

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் **இம்மாதம் 25ம்தேதிக்குள்** எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை எழுதவும்.*

1. இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபைக்கு முன்பாக தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டவர்கள் யார்?
2. இந்த தேசத்து பெண்களாகிய ஏத்தின் குமாரத்திகளில் யாக்கோபு ஒரு பெண்ணைக் கொள்வானானால் என் உயிர் இருந்து ஆவதென்ன என்று சொன்ன பெண் யார்?
3. மனுஷர் அனைவரும் அறிவில்லாமல் எக்குணமுள்ளவர்களானார்கள்?
4. ஆசையானது அலைந்து தேடுகிறதைப் பார்க்கிலும் எதுவே நலம்?
5. கோபாக்கினைநாளில் ஐசுவரியம் உதவாது எதுவோ மரணத்துக்குத் தப்புவிக்கும்?
6. தேவனுடைய நியாயத்தீர்ப்பு எதன்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம்?
7. தம்மை ராஜாவாக்கும்படிப் பிடித்துக்கொண்டு போக மனதாயிருக்கிறார்களென்று இயேசு அறிந்து, அவர்களுக்கு விலகிப்போனாரா?
8. கர்த்தர் யாரை நோக்கி: கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான் என்றார்?
9. புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்கு எப்படிப்பட்டதாயிருக்கிறதென்று சுபாவமே போதிக்கிறது?
10. நாம் எவரை அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்?

## நடப்புச் செய்திகள்

① தமிழக காடுகளை பாதுகாக்க கிராம வனக்குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளது என்று முதன்மை வனக்காவலர் அனந்தசாமி தெரிவித்துள்ளார்.

② ஆப்கானிஸ்தானில் கிறிஸ்தவராக மாறிய இஸ்லாமியர் ஒருவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவரைக் காப்பாற்ற அமெரிக்க ஜனாதிபதி புஷ் முயற்சி.

③ தென் கொரியா அதிபர் ரோக் மூஹியூன் புதிய பிரதமராக ஒரு பெண்ணை நியமித்து இருக்கிறார்.

④ ஜப்பானில் வசிப்பவர்கள் அதிகம் குழந்தைபெற்றால் வருமானவரி ரத்து செய்வதாக ஆளும் கட்சி தரப்பில் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

⑤ ஆசிய-பசிபிக் பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பில் இந்தியா மிகப்பெரிய நாடாக உருவெடுக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202. and Printed by R. Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202. Editor : B. Arjunan.

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2006-2008 Licensed to Post without prepayment
License No. TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th April 2006

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.



# கிறிஸ்துவின் சபை

17.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202 திண்டுக்கல் மாவட்டம்
போன் : 04543 - 263278 செல் : 9443558041
E-mail : thewordofchrist@sancharnet.in


"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**




திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
ஆகிய கிழமைகளில் உங்கள் WIN TV-யில் ஒவ்வொரு வாரமும்
காலை 6-15 மணிமுதல் 6-30 மணிவரை பாருங்கள்

மற்றும்



உங்கள் வானொலியில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்
(கொழும்பு சர்வதேச வானொலி) MW 873 Khz-ல்
ஒவ்வொரு வியாழன் காலை 7-15 மணி முதல்
7-30 மணிவரை கேளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**THE WORD OF CHRIST**
P.O. Box. 5, Batlagundu - 624 202 S. India ✆ 04543 263278 Mobile : 94435 58041

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**மாத இதழின் ஆண்டு சந்தா**

இந்தியா ரூ. 50/- வெளிநாடு ரூ. 500/- தனிப்பிரதி ரூ. 5/-

**Monthly Magazine**

To

From

Editor
THE WORD OF CHRIST
P.O. Box. No. 5
Batlagundu - 624 202
S. India